*கவனிக்க.-2020.10.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2200 - 2020 ඔක්තෝබර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.29**

*2200 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 68 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

67 - B 082073 - 353 (2020/10)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் பிசுக்கால் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட மாத்தறை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கம்
Matara District Co-operative rural Banks Union Limited
இல. 38/ A/ 1, உயன்வத்த மைதான வீதி, மாத்தறை.

*வழக்காளி*

வழக்கு இல. : MB 351/15
தன்மை : அடகு
அலுவலக
நடைமுறை : பொதுவானது
பெறுமதி : ரூபா 62,534.966/-

*எதிர்*

ரேடியன்ட் ட்ரேடிங் கம்பனி தனியார் நிறுவனம்.
Radiant Trading Company ( Private) Limited
இல. 455, சமூபகார மந்திரய, காலி வீதி, கொழும்பு.

பிரதிவாதி.

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் மேலுள்ள இலக்கததைக் கொண்ட வழக்கில் என்னிடம் வழங்கப்பட்டுள்ள விலக்கப்பட்டு விற்பனை செய்யும் ரீட் கட்டளை அடிப்படையில் மேல் குறிப்பிடப்பட்ட பிரதிவாதியிடம் வழக்காளிக்கு அறவிடப்பட வேண்டி உள்ள 2018.02.01 ஆந் திகதிக்கு இலங்கை ரூபா ஐம்பத்து எட்டு மில்லியன் ஒரு இலட்சத்து பத்தாயிரம் (ரூபா 58, 110,000) தொகை மற்றும் அந்த தொகைக்கு 2018.02.01 ஆந் திகதி தொடக்கம் முறைப்பாடு செய்யப்பட்ட நாள் வரை ஆண்டுக்கு 20% என்றவாறு வட்டியும், முறைப்பாடு செய்யப்பட்ட நாள் தொடக்கம் தீர்ப்பு கூறப்பட்ட நாள் வரை அந்தத் தொகை முழுத் தொகை அடிப்படையில் சட்டரீதியான வட்டியையும் அறவிடுவதற்காக மொரவக்க மாவட்ட நீதிமன்றத்தில் பதிவாளர்/ பிரதி பிசுக்கால் ஆகிய என்னால் 2020, மாச்சு மாதம் 05 ஆந் திகதி முறையான வகையில் விலக்கிற்கு பெறப்பட்ட கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்துக்கள்.

**2020, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த அசையா சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் என்பது இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகிறது**.

**கொடுப்பனவு செய்யும் முறை :**

ஏல விற்பனை முடிவுற்ற உடன் கீழ் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு கொள்முதலாளர் மூலம் என்னிடம் செலுத்தப் படல் வேண்டும். அனைத்துக் கொடுப்பனவும் பணமாக மாத்திரம் மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு காசோலை ஏற்கப்படமாட்டாது. முழுமையான தொகையை செலுத்தி அன்றைய தினத்திலேயே பொருட்களை விடுவித்துக் கொள்ளல் வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில், மொரவக்க கோரளையில், கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவில், மொரவக்க கிராம அலுவலர் பிரிவில், மொரவக்க என்ற ஊரில் அமைந்துள்ள டீ. பீ. 366841 கொண்ட உடஹிட்டிஹேன, உடஹிட்டிகந்த என்ற தானாயம் கொடெல்ல மற்றும் உடஹிட்லன்ததெனிய என்ற ஒன்றிணைந்த காணியாகும். கொட்டம்பகே அதிகாரம் பெற்ற நில அளவையாளர் இடம் தாயரிக்கப்பட்ட இலக்கம் 1304 மற்றும் 1996.04.03 ஆந் திகதிய நிலஅளவீட்டுத் திட்டத்திற்கு அமைய பிரிக்கப்பட்ட இலக்கம் கொண்ட 01, 08, 11, 12, 13, 13ஏ, 14, 15, 16, 17, 18, 19, 20, 21ஏ, 21பி, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99ஏ, 99பி, 100, 101,102 காணித்துண்டுகளைக் கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட காணியான,

வடக்கு: அக்குரஸ்ஸ- தெனியாய நெடுஞ்சாலை, கொனே கடே, பி.ஜி. தொன் ஆர்னோலிசுக்குச் சொந்தமான காணி, எஸ். பி. டயஸ் மற்றும் ஏ.ஏ. அலஹகோனுக்கு சொந்தமான காணி, இந்தக் காணியில் இதற்கு முன்னர் பாராதீனப்படுத்திய இலக்கம் 02, 03, 4ஏ,4பி, 05, 06,07ஏ, 07பி, 09, 10, 31 மற்றும் 58 கொண்ட காணித் துண்டுகளும்;

கிழக்கு: குருபெவுலலெஹேனவும்,இந்தக் காணியின் இதற்கு முன்னர் பாராதீனப்படுத்திய இலக்கம் 07, 09, 10,31, மற்றும் 58 கொண்ட காணித்துண்டுகளும்;

தெற்கு: நில்வலா கங்கை, கங்கானம்கேவத்த, கோப்பிவத்த மற்றும் கனத்தேகெதரவத்தவும்;

மேற்கு: கம்சபா வீதிக்கும் எல்லையான பத்து ஏக்கர் (10ஏ. 0றூ.0பே.) அளவு காணியில் துண்டு இலக்கம் 01,08,11,15, 16,18,19,20,25B,25A,30,31,62,63,65,75,76,77,85,90,96 ஆகிய காணித்துண்டுகள் விட்டு அதில் அமைந்திருக்கும் எஞ்சிய அனைத்து நிலம், மரங்கள், பழங்கள் ஆகியவற்றுடனாகும்.

நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய,

பதிவாளர்/பிரதி பிசுக்கால்.
மாவட்ட நீதிமன்றம்,
மொரவக்க.

2020, ஒற்றோபர் 15.

10- 1184